சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 30.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-12 |
| சாட்சியின் பெயர் | : | மணிகண்டன் |
| தந்தை பெயர் | : | பன்னீர்செல்வம் |
| கிராமம் | : | குத்தாலம் |
| தாலுக்கா | : | குத்தாலம் |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 41 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திருவாரூர் மாவட்ட திருவாரூர் உட்கோட்ட காவல் துணைகண்காணிப்பாளராக கடந்த 19.01.2024 முதல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.11.2025 ஆம் தேதி கொரடாச்சேரி காவல் நிலைய குற்ற எண்.281/2025-

ல் சட்டப்பிரிவுகள் 96(b), 118(1), 351(3) of BNS r/w 3(1)(r),3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கினை திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை C.No.203/SJ&HR/TVR/2025. Dt: 03.11.2025 ம் தேதியின் படி நான் இந்த வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை அ.சா.ஆ-10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 03.11.2025 ஆம்தேதி 12.47 மணியளவில் இவ்வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்று மாதிரி வரைடம் மற்றும் அ.சா.ஆ-4 ஆன பார்வை மகஜர் சாட்சிகள் அ.சா-5 குமார் மற்றும் அ.சா-6 சுந்தர்ராஜ் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்தும், அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் அன்றைய தினமே 12.57 மணியளவில் சம்பவ இடத்திலிருந்து சம்பவத்திற்கு பயன்படுத்திய வழக்கின் தடைய பொருட்களான சா.பொ -1 ஆன ஆரூரான் சாப்டு டிங்ஸ் என ஸ்டிக்கர் ஒட்டிய உடைந்த நிலையில் உள்ள சோடா பாட்டில் ஒன்று மற்றும் சா.பொ-2 ஆன சுமார் 77 செ.மீ நீளமுள்ள மரக்கட்டை ஒன்றும் கைப்பற்றி சாட்சிகள் அ.சா-5 குமார் மற்றும் வரதராஜன் முன்னிலையில் அ.சா.ஆ-3 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தும், மேற்கண்ட சாட்டிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் கைப்பற்றி தடைய பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் அன்றைய தினமே வழக்கின் புகார்தாரரான அ.சா-1 அன்புச்செல்வன் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா-2 சண்முகசுந்தரம், அ.சா-3 ஐயப்பன் மற்றும் அ.சா-4 வரதராஜன் மற்றும் சம்பவ சாட்சியான அ.சா-1ன் தாயர் சித்ரா ஆகியோர்களை முறையே விசாரணை மேற்கொண்டு அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அன்றைய தினமே சுமார் 19.00 மணியளவில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இந்த வழக்கின் எதிரியான சாந்தகுமார் என்பவரை கொரடாச்சேரி வெட்டாறு பாலம் அருகே கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், நிலையம் அழைத்துவந்து எதிரியின் அப்பாவிற்கு கைது குறித்து தகவல் தெரிவித்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு

உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரிக்கு சாதி சான்றிதழ் வழங்கக்கோரி திருவாரூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் அ.சா-1 க்கு அ.சா.ஆ-6 ஆன சாதி சான்றிதழ் பெற்றும். சாதி சான்றிதழ் வழங்கிய திருவாரூர் வட்டாட்சியர் அ.சா-8 ஸ்டாலின் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இதன் பின்னர் கூத்தாநல்லூர் மண்டல துணை தாசில்தார் அ.சா.9 மணிவண்ணன் என்பவர் எதிரிக்கு அ.சா.ஆ.7 ஆன சாதி சான்றிதழ் வழங்கியதை பெற்றும், பின்னர் 15.12.2025-ம் தேதி அவரை விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம்பதிவு செய்தேன். இவ்வழக்கின், புகார்தாரருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் அ.சா.7 ஹரிஸ் என்பவரையும், அ.சா.ஆ.8 ஆன காயச்சான்று வழங்கிய மருத்துவர் அ.சா.10 சக்திபாலன் என்பவரையும் 16.12.2025-ம் தேதி விசாரணை மேற்கொண்டுதனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த கொரடாச்சேரி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.11 பிரவீன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் சம்பவ சாட்சிகள் மற்றும் கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எனது தனிப்பட்ட விசாரணையிலும் வழக்கின் எதிரியான சாந்தகுமார் என்பவர் மீது இறுதி அறிக்கையை கடந்த 16.12.2025-ம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். என்னுடைய விசாரணையில் அ.சா.4 வரதராஜன் என்பவர் சம்பவம் குறித்து சாட்சியமளித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

நான் இவ்வழக்கினை எப்போது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்று குறிப்பிட்டு இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் ரத்தம் ஏதேனும் படிந்திருந்ததாக நான் தாயார் செய்துள்ள அ.சா.ஆ.4 ஆன பார்வை மகஜரில் ரத்தம் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் ரத்தம் இருந்ததாக அ.சா.ஆ.11 ஆன மதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. குற்ற சம்பவத்தில் சம்பவ இடத்திலிருந்து ரத்தம் படிந்த மண் மற்றும் படியாத மண் ஆகியவற்றை எடுத்து

அனுப்புவதன் நோக்கமே சம்பவ இடத்தை தீர்மானிக்கத்தான் என்று சொன்னால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடமானது சம்பவ இடமே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1ன் உடைய ரத்தம் படிந்த ஆடைகளை நான் கைப்பற்றவில்லை என்று சொன்னால் ஆடைகளில் ரத்தம் படியவில்லை அதனால் நான் கைப்பற்றவில்லை. அ.சா.ஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்ற விபரத்தை நான் இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.11 ஆன மாதிரி வரைபடத்தில் முகந்தனூர்-எண்கன் செல்லும் சாலையில் சம்பவ இடமாக சொல்லக்கூடிய இடத்தில் பிரபு மற்றும் செந்தில் அவர்களுடைய குடியிருப்புகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். செந்தில், பிரபு ஆகியோர்களை வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜரில் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 அதிலுள்ள ரத்த மாதிரிகள் எடுத்து அ.சா.1ன் உடைய ரத்தமும் ஒத்துபோகிறதா என்று தடய ஆய்வகத்தில் அனுப்பினீர்களா என்றால் சா.பொ.1 மற்றும் சா.பொ.2-ல் ஆகியவைகளில் ரத்தம் எதுவும் இல்லை. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவைகளை நான் வழக்கிற்காக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகிய இரண்டையும் நீதிமன்றத்தில் ஒப்படைத்த நாள் 06.11.2025 என்று சொன்னால் சரிதான். ஆனால், கைப்பற்றுதல் மகஜரில் 03.11.2025 அன்று கைப்பற்றியதாக குற்ற இறுதி அறிக்கையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி காலதாமத்தினை குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.11 ல் எத்தனை மணிக்கு வரைபடம் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் அ.சா.6 தமிழழகன் (எ) சுந்தர்ராஜ் என்பவர் விடுதலை சிறுத்தை கட்சியின் பொறுப்பாளராக உள்ளார் என்று சொன்னால் சரிதான். தமிழழகன் (எ) சுந்தர்ராஜ் என்பவர் காவல்துறைக்கு பரிட்சையமான நபர் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 அன்புச்செல்வன் என்பவருக்கும், எதிரி சாந்தகுமார் என்பவருக்கும் உள்ள முன்விரோதத்தின் அடிப்படையில் அ.சா.6 தமிழழகன் (எ) சுந்தர்ராஜ் என்பவரின் தூண்டுதலின் பேரில் நடக்காத

சம்பவத்தை நடந்ததாக பொய்யான புகார் வழக்கின் அடிப்படையில் தாங்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தான் சம்பவ இடத்திற்கு செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் அ.சா.6 தமிழழகன் (எ) சுந்தர்ராஜ் என்பவர் அரசியல் கட்சியில் இருக்கும் காரணத்தினால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க விசாரணை செய்யாமல் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு உள்ளது போல் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 அன்புச்செல்வன் என்பவர் எந்தவிதமான புகார்வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் மாதிரி வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள செந்தில், சோமு, பிரபு ஆகியோர்களை சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் தங்களது முதல் விசாரணையில் சம்பவ இடத்தில் ரத்தம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.30 18:29:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.